


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், மகபேறு மகளிர் சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட வளர் இளம் பெண்களுக்கான விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (15.03.2017) கொடியசைத்து துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 189/2017 நாள்:15.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், வளர் இளம் பெண்களுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நடத்தப்பட்ட விழிப்புணர்வு பேரணியை இன்று (15.03.2017) கொடியசைத்து துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், மகபேறு மகளிர் சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட வளர் இளம் பெண்களுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நடத்தப்பட்ட விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (15.03.2017) கொடியசைத்து துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார்.

இப்பேரணியில், வெட்டுர்ணிமடம் வில்லியம்ஸ் செவிலியர் பயிற்றுநர் கல்லூரி, நெய்யூர், குமாரசுவாமி செவிலியர் பயிற்றுநர் கல்லூரி, குழித்துறை அன்னம்மாள் செவிலியர் பயிற்றுநர் கல்லூரி, களியக்காவிளை கிரேஸ் செவிலியர் பயிற்றுநர் கல்லூரி, சாமியார்மடம், ரத்தினா கல்லூரி மற்றும் நாகர்கோவில் மகளிர் கிறிஸ்துவ கல்லூரி, சுங்கான்கடை ஐயப்பா மகளிர் கல்லூரி என சுமார் 400-க்கும் மேற்பட்டோர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி பேரணியில் கலந்து கொண்டனர்.

இப்பேரணியானது, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கி, டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வழியாக எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளி சென்று நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் துணைவியார் திருமதி. அஞ்சனா தர்மராஜன், மகளிர் கிறிஸ்துவ கல்லூரி முதல்வர் முனைவர் நிர்மலா மனுவேல், அகில இந்திய மகபேறு மகளிர் சங்கத்தின் தலைவர் மரு. ரொட்டேரியன் ஜெஸிதன் தர்மா (மும்பை), நாகர்கோவில் மகபேறு மகளிர் சங்கத்தின் தலைவர் மரு. மேரி ஆன், மரு. சுமித்ரா, மரு. சித்ரா மற்றும் மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர், இரத்த சோகை, தினை பைகளில் நீர் கட்டிகள் உருவாகுவதை தவிர்ப்பது, உடல் பருமன், மாதவிடாய் பிரச்சனைகள், மனநல பிரச்சனைகள் போன்றவற்றை எவ்வாறு கையாள்வது மற்றும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய சிகிச்சைகள் குறித்து, மருத்துவர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கம் எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.